[29th January 1966

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானத் துறையில் தனிப் பாடமாக எடுத்துக் கொண்டு படிக்கவேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. எல்லாப் பள்ளிகளிலும் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் வேண்டும். எவ்வளவு உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன ? இன்னும் எவ்வளவு பள்ளிகளில் வைக்க வேண்டியிருக்கிறது ? எவ்வளவு காலத்தில் அது முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது 2,200 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் ஆய்வுக் கூடங்கள் அவசியம் வேண்டியதுதான். அதை எவ்வளவு சீக்கிரத்தில் நிறை வேற்றுவது என்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் 200 கழக உயர்நிலைப் பள்ளிகளில் ஸயன்ஸ் லாபரட்டரீஸ் வைக்க ஒவ்வொன்றுக்கும் 17,000 ரூபாய் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது இல்லாமல் வேறு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் திட்டம் கழக உயர்நிலை பள்ளிகளுக்கு மட்டுமா ? தனியார் நடத்தும் பள்ளிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கழக உயர்நிலைப் பள்ளிகள் தான் முக்கியமானவை. அதன் பூராப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு கிரூன்ட், எந்தவிதத்தில் உதவி, அளிக்கக் கூடுமோ அது அளிக்கக் கூடும்.

திரு. சா. கணேசன் : இம்மாதிரிப்பட்ட சோதனைக்கூடம் அமைப்பது போலவே, பள்ளிகளில் பிற பாடங்களை சொல்லிக் கொடுக்கின்ற பொழுது, குறிப்பாக மொழிப்பாடங்களை சொல்லிக் கொடுக்கின்ற நேரத்தில், உச்சரிப்புப் பிழைகள் பெரும்பாலான இடங்களில் பரவலாக—எல்லா இடங்களிலும் மாணாக்கர்களிடத் திலும் ஆசிரியர்களிடத்திலும் இருந்து வருகின்றன. இம்மாதிரிப் பட்ட ஒலிப்பிழைகள் வராத வகையில் விஞ்ஞான ரீதியில் மொழிப் பாடங்களைக் கற்றுக்கொடுப்பதற்கும்—பேச்சு, ஒலி இவைகளில் தக்க பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

கடலாடி தொடக்கப்பள்ளிக் கட்டடம்

* 4 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி பஞ்சாயத்து யூனியனில் 1964-ம் ஆண்டு மே மாதம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிக் கட்டடம் இடிந்ததில் சேதம் ஏற்பட்டது உண்மையா ? ஆமெனில் விவரம் என்ன ?

29th January 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

Due to rain and gale, one small school building of the Elementary School, Sonaipiranpatty, Kadaladi Panchayat Union collapsed on 14- 5-1964 and there was no loss of life.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கிறது ? இந்த விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் யார் என்பதை அரசாங்கம் விசாரணை செய்ததா ? அப்படியென்றால், அதனுடைய முடிவு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மதுரையில் முன்னால் இவ்விதம் ஒரு விபத்து நடந்தது. அதன் பின்னால் அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. பள்ளிக்கூட கட்டடங்களையெல்லாம் அடிக்கடி மேற்பார்வை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடம் எப்போது கட்டப்பட்டது என்கின்ற விபரம் என்னிடமில்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் இடிந்தவுடனேயே அரசாங்கம் விசாரணை செய்திருக்கும். அந்த விசாரணையின் முடிவு என்ன ? யார் இதற்குக் காரணம் என்பது கண்டு விசாரிக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Pandyar-Punnapusha Hydro-Electric Scheme

* 5 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any agreement has been reached between Madras and Kerala Government in regard to the implementation of the proposed Pandyar-Punnapusha Hydro-Electric Scheme ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) It has been agreed that the Pandyar-Punnapuzha Hydro-Electric Scheme as formulated by the Madras State Electricity Board can be implemented subject to the following conditions :—

(i) the power generation and discharge should be such as to allow a regular flow throughout the year ; and

(ii) Kerala will be free to utilise the tail race water flowing into their territory from this Project, without any liability for payment on this account.

மேட்டூர் அணையில் விரிவுகள்

* 6 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேட்டூர் இரண்டாம் நிலை மின் விசைத் திட்டத்திற்கு மேற்கொண்ட வேலைகளின் காரணமாக அணையில் விரிவு (Cracks) ஏற்பட்டிருப்பது உண்மையா ?